**புலிச்சிலந்தி என்றால் என்ன?**
பருமானான, முடியால் மூடின உடல் வாகுடன், மரங்களில் வாழ்கின்ற ஒரு வகையான வசீகர தோற்றத்தைக் கொண்ட பெருஉடல் சிலந்தி இனமே புலிச்சிலந்தி ஆகும்.

பொதுவாக நாம் காணும் சிலந்திகள் இரண்டு அல்லது மூன்று சென்டிமீட்டர் நீளம் இருக்கும். ஆனால் புலிச்சிலந்தியானது 16 முதல் 20 செ.மீ (ஒரு முழு அளவிலான பென்சிலின் நீளம்) இருக்கும். இதை உங்களால் நம்ப முடிகிறதா? விலங்கியலில் இவ்வகையான சிலந்திகளை “பொசிலோதீரியா” *(Poecilotheria)* என்று அழைக்கின்றனர்.

இவற்றை மேலை நாடுகளில் செல்லப்பிராணியாக வளர்க்கின்றனர். இதுவே இச்சிலந்தியின் அழிவுக்கு காரணமாக அமைந்தது.

**புலிச்சிலந்தி வகைகள்**
உலகளாவில் 15 வகையான பொசிலோதீரிய சிலந்தி இனங்கள் உள்ளன. அவை இந்தியா மற்றும் இலங்கையில் மட்டுமே காணப்படுகின்றன. வேறு எங்கும் இந்த இன சிலந்திகள் இல்லை. இந்தியாவில், மத்திய மற்றும் தெற்கு மாநிலங்களில் ஒன்பது வகையான புலிச்சிலந்திகள் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் ஐந்து வகையான புலிச்சிலந்திகள் உள்ளன. அவையாவன, இந்திய சிங்கார புலிச்சிலந்தி, சேலம் சிங்கார புலிச்சிலந்தி, திருவிதாங்கூர் கருஞ்சிவப்பு சிங்கார புலிச்சிலந்தி, ராமேஸ்வர சிங்கார புலிச்சிலந்தி மற்றும் ஃகூட்டி சிங்கார புலிச்சிலந்தி ஆகும்.

பொதுவாக இவ்வகை சிலந்திகளை ஒன்றிலிருந்து மற்றொன்றின் புறத்தோற்ற வேறுபாட்டை கண்டறிவது எளிதல்ல. இவற்றின் இனப்பெருக்க உறுப்பைப் பார்த்தே அவற்றின் வகைகளைக் கண்டறியலாம்.

**வாழிடங்கள்**
புலிச்சிலந்திகள் மரப்பொந்துகளிலும், மரப்பட்டைகளின் இடுக்குகளிலும் வசிக்கும். இவை இரவு நேரங்களில் மட்டுமே உணவை வேட்டையாட மரப்பொந்துகளிலிருந்து வெளியே வருவதால், இச்சிலந்திகளை பகலில் காண்பது அரிது. மழைக்காலங்களில் இச்சிலந்திகள் மிகவும் சுறுசுறுப்பாகவும், கோடை காலங்களில் அதன் வாழிடங்களில் செயலற்று இருக்கும். உயிருள்ள பூச்சிகள், சிறிய சிலந்திகள், புழுக்கள், நத்தைகள், சிறிய பறவைகள் மற்றும் சிறிய வௌவால்கள் போன்றனவற்றை விரும்பி உணவாக உட்கொள்ளும்.

இனப்பெருக்க காலத்தில் ஆண் சிலந்தி தன் வாழிடத்திலிருந்து வெளிவந்து துணையைத் தேடி அலையும், அத்தருணம் பெண் சிலந்திகள் அதன் வாழிடங்களிலேயே தங்கி இருக்கும். ஆண் சிலந்திகள் சராசரியாக இரண்டு ஆண்டுகளும், பெண் சிலந்திகள் சுமார் இருபது ஆண்டுகாலம் வாழக்கூடும்.

**அழிவின் விளிம்பில்**
புலிச்சிலந்திகள் அழிவின் விளிம்பில் இருப்பதாக உலகளாவிய இயற்கை பாதுகாப்பு அமைப்பான ஐ.யூ.சி.என் (IUCN) மதிப்பீடு செய்துள்ளது. பண்ணாட்டு அமைப்புகள் மற்றும் உள்நாட்டு அரசு நிறுவனங்கள் இவ்வகை இனங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தற்போது புலிச்சிலந்திகள் அருகிவரும் விலங்காக மதிப்பிடப்பட்டாலும், போதிய தரவுகள் மற்றும் அறிவியல் ஆய்வுக்குறிப்புகள் இல்லாத காரணத்தினால் உலகளாவிய அளவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க இயலாத நிலை நிலவி வருகிறது.

பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பின் வகைப்படுத்தல்

அச்சுறுத்தப்பட்ட இனம்: CR, EN, VU

EX | EW | CR | EN | VU | NT | LC | NE

EX - Extinct
EW - Extinct in the wild
CR - Critically Endangered
EN - Endangered
VU - Vulnerable
NT - Near Threatened
LC - Least Concern
NE - Not Evaluated

**அச்சுறுத்தல்கள்**
ஓர் உயிரினத்தின் அழிவிக்கு காரணமாக அமையும் மனிதர்களின் ஊரு விளைவிக்கும் செயலையே 'அச்சுறுத்தல்' எனக் கூறலாம்.

வாழிடங்களை அழிப்பது, உணவு மற்றும் மருந்தாக பயன்படுத்த அல்லது செல்லப்பிராணியாக வைத்துக்கொள்ள காடுகளிலிருந்து சிலந்திகளை பிடிப்பது போன்ற செயல்கள் முக்கிய இரண்டு அச்சுறுத்தல்களாக உள்ளன. மேலும், இவைகள் மனிதனின் உயிருக்கு தீங்கு விளைவிப்பதாகக் கூறும் கட்டுக்கதைகளை நம்பி சிலர் இச்சிலந்திகளை கொன்று விடுகிறார்கள். இதுவும் ஒருவகை அச்சுறுத்தலே! இதுவரை இச்சிலந்தி கடித்து ஒருவர் கூட உயிரிழந்ததாக தரவுகள் இல்லை. இச்சிலந்தி கடிப்பதால் வரும் சிறுவீக்கம் மற்றும் வலி ஒரு சில நாட்களில் குணமாகி விடுவதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

ஆக்கம்: மு. முகமது ஆஷிக், லூ. இசைஅரசு, *LIFE Trust-India*
Email: indialifetrust@gmail.com
Sponsored by US Fish and Wildlife Service

# இந்திய வசீகர புலிச்சிலந்தி



Photo: LIFE Trust-India